**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 5/2023 |
| வழக்கு சாட்சி | : | PW 4 |
| நாள் | : | 24.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமையா | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | கோவிந்தசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**முதல் விசாரணை**</u> **:**

நான் தற்போது நம்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கேட்டிரிங் தொழில் செய்து வருகிறேன். நம்பாக்கம் மா தோப்பில் போலிஸ்சார் நின்று கொண்டிருந்தார்கள். என்னிடம் போலிசார் என்னை அழைத்து கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான் அது **அ.த.சா.ஆ.1** ஆகும்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கடந்த 25.05.2020ந் தேதி மாலை 2.00 மணிக்கு வெங்கடேஷ்பாபு என்பவரது மா தோப்பில் நானும், சதீஷ் என்பவரும் வந்த போது பென்னலுர்போட்டை காவல் நிலைய சந்தேக மரண வழக்கில் பென்னலுர்போட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அந்த இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைப்படம் தயார் செய்தார் என்றும், அதில் நான் எங்களை சாட்சியாக இருக்க கேட்டார் என்றும், மேற்படி உதவி ஆய்வாளர் அந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தாயார் செய்தார் என்றம், அந்த பார்வை மகஜரில் நானும், சதீஷ்ம் கையெழுத்து செய்தோம் என்றும், அதே போல்

மேற்கண்ட இடத்தல் வரைப்படம் வரைந்தார் என்றும், இது சம்மந்தமாக போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பவ்வயப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 5/2023 |
| வழக்கு சாட்சி | : | PW 5 |
| நாள் | : | 24.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிரிபாபு | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | ரோஸ் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மேட்டுபாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. அப்போது கொரன காலம். பூண்டி கூட்ரோட்டில் ஒரு நபரை போலிசார் பிடித்து வைத்திருந்தார்கள். போலிசார் கையெழுத்து கேட்ார்கள். எதற்காக என்று கேட்டேன். கொலை வழக்கில் வாக்குமூலம் கொடுப்பதாகவும் அதற்கு சாட்சி கையெழுத்து கேட்டார். அதற்கு நான் கையெழூத்து போட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தல் உள்ள இரண்டாவது கையெபத்து என்னுடையது தான் அது **அ.த.சா.ஆ.2 ஆகும்.** மேலும் மா தோப்பிலிருந்து சவுக்கு கட்டையை எடுத்து ஆஜர் செய்தார். அதிலும் நான் கையெழுத்து போட்டேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.3** ஆகும். வழகககு சம்மந்மாக போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

அந்த மா தோப்பு நம்பாக்கத்தில் உள்ளது. சவுக்கு கோம்பின் நீல அகலம் தெரியாது. தற்போது அந்த கட்டை என்னிடம காண்பிக்கப்படவில்லை. நம்பாக்கத்தில் நறைய மா தோப்பு உள்ளது என்றால் சரிதான். அது யாருடைய மா

தோப்பு என்பது எனக்கு தெரியாது.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 5/2023 |
| வழக்கு சாட்சி | : | PW 6 |
| நாள் | : | 24.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குனசேகரன் | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | கிருஷ்ணன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் சென்றான்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. அப்போது கொரன காலம். திருவள்ளூர் வருவதற்காக நானும், கிரிபாபும் வந்த போது நெய்வேலி கூட்ரோட்டில் தெரிந்த போலிசார் இருந்தார்கள். நான் என்ன என்று பார்த்தேன். கேட்டதறகும் இந்த பையன் கொலை செய்துவிட்டதாக கூறினார்கள். போலிசார் கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து போட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது அது **அ.த.சா.ஆ.4 ஆகும்.** மா தோப்பிலிருந்து சவுக்கு கட்டையை எடுத்து கொடுத்தார். அதற்கும் கையெழுத்து போட்டேன். கைப்பற்றதல் மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது காண்பிக்கப்டும் கட்டையை தான் மகஜரில் கைப்பற்றினார்கள். அது **சா.பொ.1** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சா.பொ.1–ஐ மா தோப்பிலிருந்து போலிசார் தான் அதை கைப்பற்றினார்கள். பிடித்து வைத்த நபவரை ஓரமாக நிறுவத்திவைத்து தான் போலிசார் கட்டையை கைப்பற்றினார்கள் என்று சொன்னால் எனக்கு

ஞாபகமில்லை.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.